# இரண்டாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2022

R

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

பகுதி - 1 (மதிப்பெண்கள் : 15)

15 x 1 = 15

1. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) அகநானூறு ஈ) சிலப்பதிகாரம்
2. தூசும் துகிரும் என்பன உணர்த்தும் பொருள் முறையே
   அ) பட்டும் பவளமும் ஆ) பவளமும் பட்டும்
   இ) முத்தும் மணியும் ஈ) அகிலும் சந்தனமும்
3. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
4. வீட்டைத் துடைத்து சாயம் அடித்தல். - இவ்வடி குறிப்பிடுவது
   அ) காலம் மாறுவதை அ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
5. வேலவன் குன்றம் எது?
   அ) திருப்பதி ஆ) திருத்தணி இ) திருவண்ணாமலை ஈ) ஜவ்வாதுமலை
6. 'கரிப்பு மணிகள்' என்னும் புதினத்தை எழுதியவர் _______.
   அ) ராஜம்கிருஷ்ணன் ஆ) வளர்மதி இ) இந்துமதி ஈ) வாஸந்தி
7. ஏகாரத்தில் முடியும் பாவகை _______.
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
8. சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாவினம் _______.
   அ) வெண்பா அ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா
9. மேன்மை தரும் அறம் என்பது _______.
   அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
   ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
10. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் _______.
    அ) இகழ்ந்தால் என் மனம் இறந்துவிடாது ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
    இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என் மனம் ஈ) என் மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
11. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும்
    பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
    அ) அதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
    இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

    **பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

    தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
    மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
    அருங்கல வெறுக்கையோடு அளந்து கடைஅறியா
    வளம் தலை மயங்கிய நனந்தலை மறுகும்
12. இப்பாடல் இடம்பெற்ற நூல் _______.
    அ) மணிமேகலை அ) சிலப்பதிகாரம் இ) கம்பராமாயணம் ஈ) பெரியபுராணம்
13. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர்
    அ) சாத்தனார் ஆ) கம்பர் இ) இளங்கோவடிகள் ஈ) கண்ணதாசன்
14. 'வெறுக்கை' என்பதன் பொருள் _______.
    அ) செல்வம் ஆ) வெறும் கை இ) விலை ஈ) பட்டு
15. எண்ணும்மைக்கு எடுத்துக்காட்டு _______.
    அ) தூசும் துகிரும் அ) மாசுஅறு இ) அளந்து கடை அறியா ஈ) மறுகும்

பகுதி - 2 (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4x2=8

(21 கட்டாய வினா)

16. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
17. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
18. குறிப்பு வரைக : அவையம்
19. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
20. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.
21. 'செயல்' என முடியும் குறளை எழுதுக.

பிரிவு - 2

ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 5x2=10

22. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
23. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.
24. நால்வகை பாக்களையும் அவற்றிற்குரிய ஓசைகளையும் எழுதுக.
25. ஊர்ப் பெயர்களின் மரூஉ வை எழுதுக.
    உதகமண்டலம், கும்பகோணம், மயிலாப்பூர், கோயம்புத்தூர்
26. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக : மயங்கிய
27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:
    அண்ணே! சம்முவத்தையும் கூட்டிகிட்டு வாங்கண்ணே! அவனப் பாத்தே ரொம்ப நாளாச்சு!
28. கலைச்சொல் எழுதுக : அ) Patent ஆ) Document

பகுதி - 3 (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

இரண்டு வினாக்களுக்கும் மட்டும் சுருக்கமான விடையளிக்க. 2x3=6

29. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் - இடம் சுட்டி பொருள் விளக்குக.
30. சொல்லினைப் பிரித்துப் பொருள்தருக : கானடை
31. பத்தியைப் படித்து பதில் எழுதுக.

    அறம் கூறும் மன்றங்கள் அரசனின் ஆட்சிக்குத் துணை புரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அற அவையம் தனிச்சிறப்பு பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல் நடுநிலை மிக்கது என்கிறது.

    அ) அறம் கூறும் மன்றங்கள் எதற்கு துணைபுரிந்தது?
    ஆ) மதுரையிலிருந்த அவையம் பற்றி எந்த நூல் குறிப்பிடுகிறது?
    இ) இந்த உரைப் பத்திக்கு பொருத்தமான தலைப்பை எழுதுக.

பிரிவு - 2 2x3=6

32. தொகைச் சொற்களை பிரித்து எழுதி அவற்றிற்கான தமிழ் எண்ணுரு தருக.
    மூவேந்தர், இருதிணை, நானிலம்
33. வாளித் தண்ணீர், சாயக்குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களை தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

அடி மாறாமல் எழுதுக :

34. காலக்கணிதம் - மாற்றம் எனது ............ அட்சயபாத்திரம்

பிரிவு - 3

2 x 3 = 6

35. அலகிட்டு வாய்பாடு எழுதுக.
ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்

36. தீவக அணியை சான்றுடன் விளக்குக.

37. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.
வரப்போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம்

பகுதி - 4 (மதிப்பெண்கள் : 25)

5 x 5 = 25

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடு ஒப்பிட்டு எழுதுக.

*(அல்லது)*

ஆ) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

39. அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*

அ) உங்கள் தெருவின் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின் வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

40. அ) **மொழிபெயர்க்க :**

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a former depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient temples.

*(அல்லது)*

ஆ) நயம் பாராட்டுக :

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே

- வள்ளலார்

41. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

2. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



பகுதி - 5 (மதிப்பெண்கள் : 24)

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க. 3 x 8 = 24

43. அ) பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

*(அல்லது)*

ஆ) "சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்" என்ற தலைப்பில், பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக.
(குறிப்பு : சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்)

44. அ) இராமானுசர் நாடகத்தை எழுதுக.

*(அல்லது)*

ஆ) நீவீர் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்து கட்டுரை எழுதுக.

45. அ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

*(அல்லது)*

அ) பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

******